Shops of repatriates from Burma in Madras

*525 Q.—THIRU R. R. MUNUSAMI: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) whether any steps have been taken by the Government to provide alternate accommodation to the repatriates from Burma trading in the First Line Beach, Madras; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) & (இ) இது குறித்து அரசு பரிசிலனை செய்து வருகின்றது.

திரு. ரா. ரா. முனுசாமி: தலைவர் அவர்களே, முதல் கடற்கரை சாலையில் பர்மா அகதிகள் வணிகம் செய்வதால், அங்கு போக்கு வரத்துக்கு இடைஞ்சலாக இருப்பதால், உடனடியாக அந்த இடத்தை மாற்ற அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: அவர்களைப் பொறுத்தவரையிலே நானே பலமுறை அவர்களிடத்திலே பேசி இருக்கிறேன். அவர்கள் அத்தனை பேரும் ஒரே இடத்தில் இருந்து அந்தக் கடைகளை வைக்க இடம் கேட்கிறார்கள். அதிலும் குறிப்பாக ஜார்ஜ் டவுன் பகுதியிலே இடம் கேட்கிறார்கள். அண்ணா நகர் புறநகர் பகுதியிலே போதிய கடைகளையே கட்டிக்கொடுக்கிறோம் என்றுகூட நேரிலே சொன்னேன். அவர்கள் கேட்கவில்லை. ஜார்ஜ் டவுன் பகுதியிலேயே அவர்கள் வேண்டுமென்று சொல்வது மிகவும் சிரமமாக இருக்கிறது. அவர்கள் கேட்கின்ற இடங்களிலே கொடுக்கப் பரிசிலனை செய்கிறோம். ஒரு இடம் பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான இடமாக இருக்கிறது. வேறு இடம் இராணுவத்திற்குச் சொந்தமான இடமாக இருக்கிறது. இன்னொன்று, இண்டியன் ஆயில் கார்ப்பரேஷனுக்குச் சொந்தமான இடத்திலே கடைகளை வைத்தார்கள். அந்தக் கார்ப்பரேஷன், நீதிமன்றத்திற்குச் சென்று, அவர்களைக் கட்டாயமாக அப்புறப் படுத்த வேண்டுமென்று நீதிபதி தீர்ப்புக் கொடுத்து விட்டார். அவர்களுக்கே இப்பொழுது மாற்று இடம் தேடிக் கொண்டிருக்கிறோம். இதுதான் இப்பொழுதிருக்கிற பிரச்சினை.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: தலைவர் அவர்களே, தற்போது பர்மா அகதிகள் முதல் கடற்கரைச் சாலையில் வணிகம்

1973 மார்ச் 27]

திரு. த. சோணையா : தலைவர் அவர்களே, தமிழக அரசு இளைஞர்களுக்கு இளைஞரணி என்பதன் மூலம் வேலைவாய்ப்பும், முதியோர்களுக்கு பென்ஷன் என்றும் வழங்குகிறது. ஆனால் விதவைகளுக்கு இன்னதுதான் என்று திட்டவட்டமாக இல்லை. தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 'பராசக்தி'-யிலே அவர்கள் இட்டிலி கடைதான் வைக்க முடியும் என்று காண்பித்தார்கள். அந்த முதல்வர் டாக்டர் கலைஞர் இருக்கிற இவ்வாட்சியில், விதவைகளுக்குப் பஞ்சாயத்து ஒன்றியங்களி லாவது ஏதாவது ஒரு வேலையை ஒதுக்கித் தர அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இட்டிலியையும் தோசையையும் கூட வேண்டாம். ஆடைகள் தயார் செய்து விற்கலாம். ஆசிரியர்களாகப் பொறுப்பேற்று பணியாற்றலாம். எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களுக்கு செக்கரட்டேரியட் கோர்ஸ் என்று டைப்ரைட்டிங், ஷார்ட் ஹாண்ட் எல்லாம் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. அலுவலகங்களிலே கூட பணிபுரியலாம். தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் ஆட்சியில், இப்படிப்பட்ட நல்ல தொழில்கள் எல்லாம் கொடுக்கப்படுகின்றன. விதவைகளை வேலையிலமர்த்துகின்ற திட்டங்கள் நிறைய உண்டு.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : இந்த சர்விஸ் ஹோமிலே படிக்கக்கூடிய பெண்கள் புகுமுக வகுப்பு செல்லவேண்டுமென்று கேட்டபொழுது மறுக்கப்பட்டதாக அறிகின்றேன். காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : குறிப்பாக, எனக்கு அதைப்பற்றித் தகவல் இல்லை. புகுமுக வகுப்பு வரை யிலும் இந்த சர்விஸ் ஹோமில் வகுப்புகள் நடத்துவது இல்லை. கன்டென்ஸ்ட் கோர்ஸ் வைத்து, எஸ்.எஸ்.எல்.சி. வரையிலும், மத்திய சமூக நல வாரியத்தின் மூலமாகத் தரப்படுகிற நிதியி லிருந்து, நடத்திக் கொண்டு வருகிறோம். அதிலே படிப்பவர்கள், தனிப்பட்ட முறையில், பி.யூ.சி., வேறு வெளியிலேயுள்ள கல்லூரியில் சேர விருப்பப்படுவார்களானால் அதற்கான வசதிகள், வாய்ப்புகள் என்ன என்பதை ஆராய்ந்து கூட அரசு நடவடிக்கை எடுக்க முடியும். இதுவரையிலே, பி.யூ.சி. வரையிலே தரப்படு கின்ற அனுமதி மறுக்கப்பட்டதாக எனக்குத் தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாக விவரம் தருவார் களானால் அதைப்பற்றி ஆலோசிக்கலாம்.